Registered No. M.—253.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ௵ அக்டோபர் ௴ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—9.

விஷயங்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் :—பத்திராதிபர்.
தமிழ் நூலாராய்ச்சி—வீரசோழியம் :—அ. குமாரசாமிப் பிள்ளை.
மதசூக்ஷமை :—P. V. கணபதிப் பிள்ளை B. A.
பறவைகள் :—P. V. கோலப்ப பிள்ளை B. A.
உலகமெய் வாழ்க்கை உலகப்பொய் வாழ்க்கை:—K. N. சிவராஜபிள்ளை B.A.
இல்வாழ்க்கை :—
செல்வியாள் :—A. K. கிருஷ்ணய்யங்கார்.
சாமகவி :—
சமாசாரக் குறிப்புகள் :—

பத்திராதிபர்.
வள்ளல். சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோவில் விக்டோரியா பிரஸில் பதிப்பித்து
திருவனந்தபுரத்தில் வெளியிடப்படுகின்றது.

1901.

வருஷ சந்தா ரூ. 2.] [சஞ்சிகை அணா 4.

அறிவித்தல்.

உள்ளூர் வெளியூர்க் கையொப்ப நேயர்கள், நமது பத்திரிகை முதற் புத்தகம் 9-வது இலக்கமும் வெளியாயிற்று. முன்பணமாகச் செலுத்தப்படவேண்டிய சந்தா இன்னும் கிடைக்கவில்லை யென்னின் பத்திரிகாபிவிர்த்தியென்னாம்? நமது சந்நேயர்கள் கண்ணோட்டத்தாலன்றோ பத்திரிகை ஒழுங்கே நடைபெறல் வேண்டும். ஆதலின் வருடக்கடைசியாய் விட்டமையால் மேலும் தாமதப்படுத்தாமல் 10-வது இலக்கம் வெளியாவதற்கு முன்னுவது அனுப்பித்தருவீர்களென்று முழுதும் நம்புகின்றோம். அல்லது V. P. P. வழி அனுப்பப்படும் 10-வது இலக்கத்தைத் தயை செய்து ஆதரிப்பீர்களாக. பத்திராதிபர்.

மைசூர் சமஸ்தானம்
திவானுயிருந்து காலஞ்சென்ற
இராஜ துரந்தர
Sir K. சேஷாத்ரியையர், K. C. S. I.,
அவர்கள் மீதியற்றிய
சரமகவி.

ஆசிரிய விருத்தம்.

பெரிய நல மைசூரினரசாட்சிக் கேற்றமந்தி
ரக்கிழமை பெற்று ராய்ந்தே
அரியபல காரியஞ்செய திராஜ துரந்தரப்
ப்ரதிபபே ரடைந்து தேர்ந்தாய்
தெரியவருங் குமாரபுரச் சேஷாத்ரியைய
னின்னிற் சேர்ந்தார் செய்வர்
உரியதகைமை யிகைபொறை யுயர்கல்வி ஞான
நன்மையுற்றுச் சென்றேய்.

நிலைமண்டில வாசிரியப்பா.

அணிசா லிவாகனத் தாயிரத் தெண்ணூற்
றிருபானுன்கி லிலகு பிலவவான்
டாவணி யிருபானெட்டாந் தெய்தி
வாழுவாய்பூர நாளிடை வளஞ்சால்

(டைட்டில் 3-ம் பக்கம் பார்க்க).

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

புத்தகம்—I. | 1901 ௵ அக்டோபர் ௴ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—9.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் முற்காலத்தில் சேரசோழபாண்டியர்களாகிய பெருநிலவேந்தர்களும் குறுநிலமன்னர் (ஜமீந்தார்) களும் மிகப்பாராட்டி யாதரித்தவள்ளன்மை நன்கறிந்த தொன்றும். அம்மூவேந்தருள் பாண்டியவமிசத்தாராதரவின்கீழ் ஆலவாயில்விளங்கிய தலை இடை, கடை யென்ற தமிழ்ச்சங்கங்கள் நந்தமிழ்த் தெய்வத்திற்கு உறையுளாய் விளங்கிற்று. நம்நாட்டு மன்னர்கள் அயல் மன்னர்படையெடுப்பு முதலிய பல்லாற்றானும் நாளடைவிலொடுங்க க்ஷமணபௌத்தர்களால் ஒருவாறாய் நிலவிற்று. அவர்களும் அன்னியமத ஹிம்சைக் குட்பட்டு ஒழிய நம்மடாதிபதிகள் பெரும்பான்மைபாராட்டி வளர்த்துவந்தார்கள். தற்காலத்தில் பெரும்பான்மையும் அவர்கள் கதி நம்நாட்டு அறிவாளர்களால் நினைத்தற்கும் பேசுதற்கும் மிக அருவருப்புத்தருவதாயிருக்கின்றது. அவர்களிற் பலரைப்பற்றி நமக்கெட்டும் சமாசாரங்களால் அவர்கள் சிறிதேனும் முன்னிலைமையை அடைவார்க

ளென நம்ப இடமில்லை. பின் தமிழ்மொழியின் உயர்தரக் கல்வியை ஆதரிப்பாரின்மையால் அதன் உயர்தர நூல்கள் நிலவறைகளிலும் பேழைகளிலும் சேமிக்கப்பட்டுச் சிலபூச்சியினங்களுக்குணவாயின. இஃதிங்ஙனமாகச் சிறிதுகாலமாய்த் தமிழ்நாட்டில் ஆங்கிலமும் தமிழும் கற்றறிந்த சில உயர்தரப் பட்டதாரிகளானும், அவர்களோடோடிய சிலதனித்தமிழ்ப் புலவர்களானும், சிற்சில பிரபுக்களானும் தமிழ்மொழிவளர்க்கலோடு தேசக்ஷேமம், மதாபிவிருத்தி, ஆசாரசீர்திருத்தம் இவைகளும் ஒருவாறு பேணப்பட்டுவருகின்றன. இப்போது நலப்பிரியர் ஊக்கத்தால் நாளடைவில் நந்தமிழ் மொழி விருத்தியடைந்தேவருகின்றதென்பதை யாவருமறிவார்கள். எனினும் சிலரால் தமிழ்தனிமொழி, கடவுளாலாக்கப்பட்டது என்பதுபோன்ற வீண்பெருமைகள் பாராட்டப்பட்டு வந்ததேயன்றிப் பெரும்பயன் விளையவில்லை.

ஈண்டுத்தலைப்பிற் சுட்டிய சங்கத்தைப்பற்றிப் பல தமிழ்ப்பத்திரிகைகளிலும் சில நாளாய்ப் பேசப்பட்டு வருகின்றது. நம்பத்திரிகையிலும் ஒருமுறை சுருங்கத் தெரிவித்திருக்கின்றோம். நாம்தெரிவித்தபடி ஸ்தாபனம் பெற்று விளங்குகின்றமையறிந்து மிக உவகைகூர்கின்றோம். இதனைத்தாபித்த தமிழ் அபிவிருத்தியைப் பெரிதும் பாராட்டிவந்த பரம்பரையிலுதித்து அந்நோக்கத்தை முதன்மையாகக்கொண்டு அதற்காக என்றும் சலிப்பின்றி உழைத்துவரும் கனம். பாண்டித்துரை சாமித்தேவர் அவர்களுக்கும் அப்புலவர் சிகாமணிக்கு உடனின்று உதவிபுரிந்த நம்பாஷாபிமானிகளுக்கும் தமிழ்நாடு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. இச்சங்கம் முற்காலத்தின் முச்சங்கங்கள் போன்று நந்தமிழ்மொழிக்கு வேண்டிய நன்மைகளைத் தற்கால நிலைக்கேற்ப முற்றிலும் முதவுமென்று நம்புகின்றோம். தற்காலம் நமது பாஷையபிவிருத்தி அடையவேண்டுமேயானால் தமிழ்மொழியின் பயிற்சியால் வருவாய்க்கு வழி யேற்படல் வேண்டுமென்றும், இன்றேல் வருவாயை

நோக்கும் சாதாரண ஜனங்களின் பயிற்சியை இச்சங்கத்தின்நோக்கம் கவர்ந்துகொள்ளு மென்று தோன்றவில்லை யென்றும் சிலர் அபிப்பிராயப்படுவர். தமிழறிஞர்க்கு வருவாய்க்கு வழியு மேற்படுமாயின் இச்சங்கத்தின் உபயோகம் அதிகரிக்குமென்பதிற் றடையில்லை. ஆனால் இப்பொழுது நம்மினின்றும் பாஷை, மதம், நடைஉடை முதலியவற்றால் முற்றிலும் மாறுபட்ட அயல் நாட்டார் ஆளுகையின் கீழ் பரதந்திரராய் நிற்கும் நாம் அந்நோக்கங்கொண்டுழைப்பதில் காரியசித்தி அடையலாமோ வென்பது சந்தேகம். ஆதலின் புதிதாய்த் தாபிக்கப்பட்ட இச்சங்கத்தில் காலத்திற்கேற்பப் பாஷாபிவிர்த்திக்கு வேண்டும் வழிகள் ஒருவாறு ஒருங்கே யமைந்திருப்பதாகவே எண்ணுகிறோம். ஆங்காங்கு பற்பல சிறிய தமிழ்ச்சங்கங்களேற்படுத்தி அவற்றிற்காகச் சிற்சிலகாலம் உழைத்துப் பின்கைநழுவவிட்டும் விடாதுமிருப்பதைக்காட்டிலும் தமிழ்நாட்டார் யாவரும் ஜாதிபேதம், மதபேதம்முதலிய வேற்றுமைகளைக் கவனிக்காது ஒருங்கே முயற்சித்து இவ்வொரு சங்கத்தையே நல்லஸ்திதியில் நிலைநிறுத்துதல் பெரும் பயன் விளைக்குமன்றோ? இச்சங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து நீடூழி வாழ்ந்து தமிழ்மொழியைப் பண்டைநிலைக்குக் கொண்டுவருமாறு எல்லாம் வல்லகடவுளை இறைஞ்சுகின்றோம்.

பத்திராதிபர்.

இச்சங்கத்தின் சட்டதிட்டங்கள்வருமாறு:—

“ இச்சங்கம் “ மதுரைத் தமிழ்ச்சங்கம் ” எனப் பெயர் பெற்று வழங்கலாகும்.

இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் தமிழ்ப் பாஷையை அபிவிருத்திசெய்தல். அந்நோக்கம் பின்வருமுறைகளை அநுசரித்து நிறைவேறலாகும்:—

(1) மாணாக்கர் தமிழ் கற்கும் வண்ணம் ஒரு கலாசாலை அமைத்தல்; அவர்கள் ஊக்கத்துடன் கற்க உதவிசெய்தல்.

(2) அச்சுப்பிரதிகளும் பழைய ஏட்டுப் பிரதிகளும் அடங்கிய ஒரு தமிழ்ப் புத்தகசாலை அமைத்தல்.

(3) ஒரு நல்ல தமிழ் அச்சியந்திரசாலை ஸ்தாபித்து சங்கத்தின் பெய

நால் பெரும்பான்மை இலக்கிய இலக்கண விஷயங்களும் மற்றும் பாஷாபிவிருத்திக்காய விஷயங்களும் அடங்கிய ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை பிரசுரித்தல்; அச்சுக்குவராத அரிய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தல்.

(4) அரிய தமிழ் நூல்கட்கு உரை எழுதுவித்தல்; பிறபாஷைகளின் உபயோகமுள்ள நூல்களை மொழிபெயர்த்தல்; தற்கால சாஸ்திர சம்பந்தம் உள்ள பல நூல்கள், தேச சரித்திரங்கள், புலவர் சரித்திரம் முதலியன இயற்றுவித்தல்; பழைய சாசனங்களைத் தேடி வெளிப்படுத்தல் முதலியன.

(5) வருடந்தோறும் ஒரு தமிழ் வித்வத் சபைகூட்டி அதில் தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்திக்கு வேண்டிய விஷயங்களைப்பேசுதல்; தமிழ்கற்றவர்கட்கு, அவ்வவர் தகுதிக்கேற்பச்சிறப்புப் பெயரளித்தல்; அரங்கேறும் நூல், உரைகளை அங்கீகரித்தல் முதலியன.

(6) தமிழ் நூல், உரை எழுதி வெளிப்படுத்துவோர்க்கு அவசியமாயிற் பொருளுதவி புரிதல்.

(7) தமிழ் நூல்களின் அருமை பெருமைகளைப் பலரும் அறியும்வண்ணம் அடுத்தடுத்துப் பிரசங்கங்கள் செய்வித்தல்; அவற்றைத் தனிப்பத்திரிகைகள் வாயிலாய் அச்சிட்டுப் பரவச் செய்தல்.

(8) கலாசாலைகளில் தமிழ் அபிவிருத்தியைக் கவனித்துவருமாறு இராஜாங்கத்தாரையும், சர்வகலாசாலைச் சங்கத்தாரையும் வேண்டிக்கொள்ளல் முதலியன.

சங்கத்து வித்வான்கள்:

1. (1) தமிழ்வித்வான்கள்,

(2) வடமொழி வித்வான்கள்,

(3) ஆங்கிலத்-தமிழ் வித்வான்கள்,

(4) ஆங்கில-வடமொழி வித்வான்கள், என இந்நான்குதிறத்தினராவர்.

2. இவர்கள் செய்தற்குரியன:

(1) சங்கத்தில் அச்சிடும் செந்தமிழ் நூல்களைப் பரிசோதித்தல்.

(2) வேண்டும் செந்தமிழ் நூல், உரை இயற்றல்.

(3) வடமொழி, ஆங்கிலம் இவற்றினின்றும் வேண்டுவனவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தல், அவற்றைப் பரிசோதித்தல்.

(4) பழைய ஏட்டுப்பிரதிகள், சாசனங்கள் சேர்த்துச் சங்கத்துக்கனுப்புதல்.

(5) மாணுக்கர்களின் சோதனைக்கு வேண்டும் வினாக்கள் குறித்தல், விடைகளைச் சோதித்தல்.

(6) மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகைக்கு வேண்டும் விஷயங்கள் எழுதல்.

(7) தமிழில் உபந்யாஸங்கள் புரிதல்.

(8) வருடந்தோறுங்கூடித் தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்திக்கு வேண்டியன ஆராய்தலும், தமிழ் கற்றவர்க்கு அவ்வவர் தகுதிக்கேற்ற சிறப்புப் பெயர் அளித்தலும், புதியவாய் அரங்கேறும் நூல்களை அங்கீகரித்தலும், இன்னும் சங்கத்திற்குக் கல்வியால் வேண்டுவன புரிதலும் ஆம்.

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை.

1. பிலவ வருஷம் ஆவணி மாதம் 31-ம் தேதியாகிய 1901-ம் வருஷம் செபடம்பர் மாதம் 15-ந்தேதி மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஓர் அங்கமாகிய செந்தமிழ்க் கலாசாலை தொடங்கலாகும்.

2. இக்கலாசாலைக்கு வேண்டும் பொருண் முழுதையும் இராமநாத புரம் மாட்சிமைதங்கிய சேதுபதி யவர்கள் உதவுகின்றமையால், அவர்கள் பெயர் பெற்று இஃது "சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை" என வழங்கலாகும்.

3. இக்கலாசாலையில் செந்தமிழிலக்கண விலக்கியங்களும், சைவத்திருமுறைகளும், வைணவ திவ்யப்பிரபந்தங்களும் கற்பிக்கலாகும்.

4. இவற்றுடன் வட மொழியும்' காலத்திற்கேற்ற ஆங்கிலேயமும் வேண்டுமளவாற் கற்பித்தலாகும.

5. இக்கலாசாலையின் வரையறைகட்கு உடன்பட்டுக்கற்கும் வதியமாணாக்கர்கட்கு உண்டி முதலிய நல்லுதவிகள் புரியலாகும்.

(7) இக்காலாசாலையில்வருடந்தோறும் நிகழும் சோதனையில் நன்று தேறிய மாணாக்கர்கட்கு அவ்வவர் தகுதிக்கேற்பச் சிறப்புப்பெயரும் நன்கொடையும் அளித்தலாகும்

7. இக்கலாசாலையிற் கற்க விரும்புவோர் 1901-ம்வருஷம் செப்டம்பர் மாதம் 13-ந்தேதி காலை 8-மணிக்கு மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் வந்து சேர்தல்வேண்டும்; அப்போது தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி யவர்கள் முதலியோரால் மாணாக்கர்களைத் தெரிந்துசேர்த்தலாகும்.

8. ஆங்கில பாடசாலைகளிற் கற்போருக்குத் தமிழறிவு மிகுதற்பொருட்டு மாலையில் சர்வகலாசாலைத் தமிழ்ப் பாடங்களையே கற்பித்தலாகும். இவர்களில் மெட்ரிகுலேஷன் வகுப்பினர், மாதம் ஒன்றுக்கு அணு நான்கும்; எப். ஏ. வகுப்பினர், மாதம் ஒன்றுக்கு அணு ஆறும்; அவ்வவ் மாதத்தின் ஐந்து தெய்திக்குள் கொடுத்தல்வேண்டும்.

9. இவர்கட்கு 1902-ம் வருடம் முதல் ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் மேற்குறித்த பாடங்களிலே தமிழ்ச் சங்கத்தார் நடத்துஞ் சோதனையில் தலைமையிற்றேறும் முதல் ஐவர்க்குச் கீழ்க்காட்டியவாறு பரிசளித்தலாகும்:—

பரிசின்விவரம்.

(1) மெட்ரிகுலேஷன் வகுப்பில் தேறிய மாணாக்கர்கட்கு:

முதலாவது பரிசு ரூ. 30.
இரண்டாவது „ ரூ. 25.

2140

மூன்றாவது ,, ரூ. 20.
நான்காவது ,, ரூ. 15.
ஐந்தாவது ,, ரூ. 12.

(2) எப். ஏ. வகுப்பில் தேறிய மாணாக்கர்கட்கு:

1-வது பரிசு ரூ. 40.
2-வது ,, ரூ. 35.
3-வது ,, ரூ. 30.
4-வது ,, ரூ. 25.
5-வது ,, ரூ. 20.

(3) பீ. ஏ. வகுப்பில் தேறிய மாணாக்கர்கட்கு:

1-வது பரிசு ரூ. 50.
2-வது ,, ரூ. 45.
3-வது ,, ரூ. 40.
4-வது ,, ரூ. 35.
5-வது ,, ரூ. 30,

10. இச்சோதனைக்கு உடன் படுவோர் அவ்வருடத்துச் செப்டம்பர் மாதம் 15-தேதிக்குள் இத்தமிழ்ச்சங்கக் காரியதரிசியவர்கட்கு மெட்ரிகுலேஷன் முதல் முறையே ரூபா அரை, ஒன்று, இரண்டு செலவுப்பொருள் அனுப்பல்வேண்டும்.

11. இச்சோதனைகள் மதுரை, சென்னை, கும்பகோணம், திரிசிராப்பள்ளி, திருநெல்வேலி இந்நகரங்களில் சங்கத்தாராற் குறிக்குந் தெய்தியில் குறிக்கும் இடத்தில் நிகழ்த்தலாகும்.

12. மதுரை ஸில்லாவிலுள்ள ஆங்கிலப் பாடசாலைகளில் 3, 4, 5 வகுப்பு (Forms) களில் வித்யா விசாரணைத் தலைவரால் குறிக்கப்பட்ட அவ்வத்தமிழ்ப் பாடங்களைக் கற்று இச்சங்கத்தார் புரிகின்ற சோதனையிற் றேறும் மாணாக்கர்கட்கு இளமையிலே தமிழில் ஊக்கம் உண்டாம் வண்ணம் பின்னுள்ளவாறு பொருட் பரிசளித்தலாகும்:—

(1) 3-வது பாரம் சோதனையிற் றேறும் மாணாக்கர்கட்கு:

1-வது பரிசு ரூ. 5.
2-வது ஷை ரூ. 3.

(2) 4-வது பாரம் சோதனையிற் றேறும் மாணாக்கர்கட்கு:

1-வது பரிசு ரூ. 6.
2-வது ஷை ரூ. 4.

(3) 5-வது பாரம் சோதனையிற் றேறும் மாணாக்கர்கட்கு:

1-வது பரிசு ரூ. 7.
2-வது ஷை ரூ. 5.

13 சர்வகலாசாலையோர் நடத்தும் எம். ஏ. (M. A. சோதனையின் பொருட்டுக் கற்பவர்க்கும், மற்றுந் தமிழறிவு மிகவேண்டுவோர்க்கும் சாலையில் தனியே கற்பித்தலாகும்.

பாண்டியன் புத்தகசாலை.

1. இச்சங்கத்துக்கு அச்சுப் பிரதிகளும் பழைய ஏட்டுப்பிரதிகளும் அடங்கிய ஒரு புத்தகசாலை அமைத்தலாகும். பிலவ வருஷம் ஆவணி மாதம் 31-க்குச் சரியான 1901-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 15-உ தொடங்கலாகும்.

2. அது "பாண்டியன் புத்தகசாலை" எனப் பெயர்பெறும்.

3. அது காலை 7-மணிமுதல் மாலை 6 மணிவரை திறந்திருக்கும்.

4. படிக்க விரும்புவோர் புத்தகசாலை புரப்பவர் அநுமதிபெற்று ஆங்குள்ள பதிவுப்புத்தகத்தில் தம்பெயரை முதலில் பதிவுசெய்து பின் கொடுபடும் தனிப்பத்திரிகையிற் கண்ட விவரங்களை எழுதிக்கொடுத்தபின் வேண்டும் புத்தகங்களைப் பெறலாம். அவற்றை ஆங்கிருந்தே கூடியவரை கருத்துடன் உபயோகித்துத் திரும்பக் கொடுத்தல்வேண்டும்.

5 அக்கிராசனாதிபதி, காரியதரிசி இவர்கள் எழுத்து மூலமான அநுமதியின்றி வேறு எவரும் எவ்வித காரணத்தானும் புத்தகங்களை வெளியே எடுத்துப்போக இடம் பெறார்கள்."

தமிழ் நூலாராய்ச்சி

வீரசோழியம்.

தமிழ்ப்பாஷையிலுள்ள பழைய இலக்கணநூல்களுள்ளே வீரசோழியமுமொன்று; தமிழ்நூல்களுள்ளே ஆங்காங்குவரும் அரும்பிரயோகங்கள் பலவற்றிற்கு இதன்கணன்றி மற்றை இலக்கணநூல்களிலே விதிகள் காணப்படமாட்டா. இந்நூல் செய்தவன் பௌத்தசமயியாகிய புத்தமித்திரனென்பவன்; அது, "மிக்கவன் போதியின் மேதக்கிருந்தவன் மெய்த்தவத்தாற்—றொக்கவன் யார்க்குந் தொடரவொண்ணாதவன் றூயனெனத்—தக்கவன் பாதந் தலைமேற் புனைந்து தமிழுரைக்கப்—புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்த மித்திரனே" என்னுமிந்நூற்பாயிரத்தாற் பெறப்படும். இங்ஙனமாகத் திராவிடப்பிரகாசிகைகாரர் "இந்நூலாசிரியன் அருகந்தருட்பட்ட புத்தமித்திரன்" என்றார். அருகந்தர் என்னும் வடசொல் அருகக் கடவுளை வழிபடுவோரை உணர்த்துதல் பிரசித்தியன்றோ? அது, "மாத்தலை பதிக்கு மூத்தவாயருகந்தர்கூடி" என்னுஞ் சூதசங்கிதையானும், பெரியபுராணத்திலே மூர்த்திநாயனார் புராணத்து, ௧௫-ங் கவியானும் பெறப்படுமே. அருகந்தனாயின், போதி மேதக்கிருந்தவனை வணங்குவானா?

இது தொல்காப்பியத்தின் வழித்தாகச் செய்யப்பட்ட நூலென்று சிலர் கூறுவர். அங்ஙனமாயின், எழுத்ததிகாரத்திலேயும் மற்றையதிகாரங்களிலேயும் வரும்விதிகள் பெரும்பாலும் வடமொழி யிலக்கணங்களையும் பிறவற்றையும் அநுசரிக்குமாறென்னை? சந்திப்படலத்திலே ௧௨-ஞ் சூத்திரப்படி இரு ஆராய்ப்பிருகத்ரதன் மகன் பார்கத்ரதன் எனற்பாலது வேதாரணிய புராணத்திலே தீர்த்த ௫௬-ல் பிரகத்ரதன் என மாறிற்று. "ஆவுமகரக்கு" என்றபடி தத்திதமாய்ப் "பாராசாலிங்கம்" என வந்தது மேற்படி புராண. காசிப ௯-ல் "பாராசரலிங்கம் நீட்டும்வழி நீட்டல்" எனக் கூறப்பட்டது. தத்திதப்படலத்திலே "அன்னியவின விகனேயன்" என்பதிற் சொல்லிய ஏயன் என்னும் விகுதிபெற்று வந்த தத்தாத்திரேயன் என்பது மேற்படி புராணத்திலே தீர்த்த ௭௯-ல் தத்தாத்திரயன் என மாறிற்று. இவைகளினுண்மையை வீரசோழியமன்றித் தொல்காப்பியம் புலப்படுத்துமா? மற்றுஞ் சொல்லிலக்கணத்திலே கூறிய உபகாரக முதலியவை

கள் தொல்காப்பியத்தனவா? தொல்காப்பியரோ பொருளை அகம், புறம் என இரண்டாக வகுத்தார். இவர் அகம், அகப்புறம், புறம், புறப்புறமென நான்காக வகுத்தார். தொல்காப்பியர் கருப்பொருளை "தெய்வமுணவே மா மரம் புட்பறை. செய்தியாழின் பகுதியொடு தொகைஇ யவ்வகைபிறவுங்கருவென மொழிப" எனப் பொதுவாகக் கூறினரன்றி ஒவ்வொரு நிலத்துக்குந் தனித்தனி கிளந்து கூறினரல்லர். இவர் தனித்தனி கிளந்து கூறினர்.

யாப்பிலக்கணத்திலோ தொல்காப்பியர் நேரசை நிரையசை, நேர்பசை; நிரைபசை என நாலசை கொண்டார். இவர் நேரசை, நிரையசை என இரண்டு கொண்டார். இந்நூலிற் கூறப்பட்ட சந்தபேதங்களும் விருத்தபேதங்களும், கட்டளைக் கலித்துறையிலக்கணம் முதலியனவுந் தொல்காப்பியத்திற் காணப்படமாட்டா!

இந்நூலிலே அணியிலக்கணத்திற் கூறப்பட்ட அணிகளொன்றுந் தொல்காப்பியத்திற் காணப்படமாட்டாது. இந்நூலிற் கூறப்பட்ட அணியிலக்கணத்திற்குத் தமிழ்த் தண்டியலங்காரம் முதனூல் என்பர் சிலர். அதுபொருந்தாது. தமிழ்த்தண்டியலங்காரத்திற்கு முதனூலாயுள்ள காவியாதர்சம் என்னும் அலங்காரமே இதற்கும் முதனூலாகும். காவியாதர்சத்திற் சொல்லப்பட்ட வாக்கியப்பொருளுவமை முதலிய சில அலங்காரங்கள் இவராலன்றித் தமிழ்த்தண்டியலங்கார காரரால் மொழிபெயர்க்கப்படவில்லை. காவியாதர்சத்திலுள்ள பிரதிவஸ்தூபமை இவரால் எதிர்ப்பொருளுவமை எனவும், தண்டியலங்காரகாரரால் மறுபொருளுவமை யெனவும் பெயர்க்கப்பட்டது. காவியாதர்சத்திலுள்ள அர்த்தாந்தரநியாச மென்பது இவராற் பிறபொருள்வைப் பெனவும், தண்டியலங்கார காரரால் வேற்றுப்பொருள்வைப்பு எனவும் பெயர்க்கப்பட்டது. காவியாதர்சத்திலுள்ள சமாசம் என்பது இவரால் சுருக்கு எனவும், தண்டியலங்கார காரரால் ஒட்டெனவும் பெயர்க்கப்பட்டது. இவ்வாறு வரும் பேதம் பல.

இத்தகைச் சிறப்புடைய வீரசோழியத்தை ஒருசிறு நூலெனவும் ஆதுநிகநூலெனவும் சிற்றறிவுப் புலவர் செய்த நூலெனவும் அவமதித்துரைப்பார்க்கு நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலமுதலிய இலக்கண நூல்கள் பெருநூல்களாதலும் பேரறிவாளர் நூலாதலும் பிறவும் அதிசயமேயாம்.

இங்ஙனம்

அ. குமாரசாமிப் பிள்ளை.

சுன்னாகம்
பிலவ ௵
ஆவணி ௴ ருஉ.

(தொடர்ச்சி)

இக்காண்டம் உண்மை ஞானத்தை உணர்த்துவதால் ஞானபாக மெனப் பெயர் பெறும். இதுவே ஒவ்வொரு மதத்திற்கு முக்கிய அங்கம். இது வன்றி யாதொரு சமயமும் நிலைபெறமாட்டாது. பகவத்கீதை முதலியன இக்காண்டத்துக்குரிய நூல்கள்.

இரண்டாவதான புராணகாண்டம் முதற்காண்டத்த தாகிய உண்மைகளை விளக்கிக் காட்ட நேர்ந்த உலக சரித்திரங்களை எடுத்துக் கூறும். இதிலடங்கியவை அந்நந் நாட்டுகளில் உண்மையிலே நடந்த சரித்திரங்களென்பதே ஐதீகம். சரித்திரங்களெனவே ஒவ்வோர் நாட்டிற்கும் வெவ்வேறாயிருத்தலவசியமே. பெரிய புராணம், பழய ஏற்பாடு முதலியன இப்பாகத்துக்குரிய நூல்கள்.

மூன்றாவதான ஒழுக்க காண்டத்தில் முதற் காண்டத்தில் கூறப்பட்டுள்ள உண்மை ஞானத்தை யுணர்ந்து அதன் பயனாகிய ஜென்ம சாபல்ய மெய்து தற்கு ஒழுகவேண்டிய ஒழுக்கங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

கொல்லாமை பயனுடைத்து, சோற்றிப்பாமை நன்மையுடைத்து என்பன போன்றவை இக்காண்டத்திற் கூறிய ஒழுக்கங்களாம். துறள், புந்ததர்மம் என்பன இப்பாகத்துக் குரிய நூல்கள்.

நான்காவதான கர்மகாண்டம் ஆன்ம கோடிகள் உய்யும் பொருட்டுப் புரிய வேண்டிய கர்மாநுஷ்டானங்கள் எவை. எம்முறைமைத்து வென்பதையும் மற்றுஞ் சகல கிரியைகளையும் அவைகளின் முறையையும் எடுத்துக் கூறும். இன்ன இன்ன யாகங்கள் இன்ன இன்ன முறையில் செய்ய வேணும், அஷ்டாங்க நமஸ்கார முறை இன்னது. சகல மூர்த்தங்களும் பிரதிஷ்டை செய்யுமுறைகள் இவ்வண்ணம். என்பன போன்றவை இக்காண்டத்தில் கூறப்பட்டவை. மனுநூலின் பெரும் பாகம் முதலியன இக்காண்டத்துக் குரிய நூல்கள். இனி இந்நான்கு காண்டங்களு ளொவ்வொன்றின் பயனைச் சற்று கவனிப்பாம். முதலில், நான்காவதான கர்மகாண்டத்தின் பயன் கர்மங்கள் செய்கின்றவனை அப்பியாசத்துக்குள்ப் படுத்துகின்றதென்பதை நீக்கி வேறு சிறிதும் இல்லை என்பது திண்ணம். இக்காண்டத்திலடங்கியவையெல்லாம் அந்நந் நாட்டிற்குத் தக்க விதமா யேற்படுத்தப்பட்டிருக்கின்றன. தேசங்களின் சீதோஷ்ணமும், செழிப்பும், ஸ்திதியும் பலவகைத் ததுபோலக் கர்மாநுஷ்டாநங்களும் பலவகையாயிருக்கும். உண்மையை உற்று நோக்குங்கால் இக் கர்மாநுஷ்டாநங்களினால் மட்டும்

யாதொரு நித்தியப் பயனுமில்லையென்றே கூறல் வேணும். மனம் மாசுநீங்கி யிருத்தல் அத்தியந்த அவசியமேயன்றி பலவகை வெளிவேஷங்களினுற் பயன் சிறிது மில்லை. வடதிசை நோக்கிப் பஞ்சாக்ஷரம் அணிந்தாலென்ன, அன்றித் தென்றிசை நோக்கியணிந்தாலென்ன? ஒன்றற்கு உண்மாசு நீக்க வன்மை யேற்படும் மற்றொன்றற்கு அவ்வன்மை ஏற்படாது மிருத்தல் கூடுமோ? நாமம் அணிவதில் பாதம் நீண்டிருந்தால் என்ன, அன்றிக் குறுகியிருந்தாலென்ன? பிரதக்ஷணம் வலப்பக்கமாய் வந்தாலென்ன, அன்றி யிடப்பக்கமாய் வந்தாலென்ன? மும்முறை வந்தாலென்ன அலது இருமுறை வந்தாலென்ன? இவை யெல்லாம் மோக்ஷார்த்தமாகா. ஆதலின் இக்கர்மங்களில் மாறுபட்டோரை தம் எதிரிகளாக்கி ஹிம்சிக்க முயன்று ரத்தப் பிரவாகத்திற் கிடங்கொடுத்தல் தர்மமாகுமா? வைணவர்களில் வடகலையார் தென்கலையாரிவர்களுக்குள் உண்டாகுஞ் சச்சரவுகளும் அதனுல் விளையுக்கிங்குகளுந் தெரியாதன வல்லவே. கர்மகாண்டத்திலடங்கிய இவ் வற்ப விஷயங்களுக்காக உயிர் வெறுத்து நிற்பவர்களினும் அறிவிலாப் பேதையர் எவர் உளர்? அத்தகைய அறிவிலிகள் உலகில் மிக்கோருண்டென்பதை நினைக்க மனஞ் சஞ்சல மடைகின்றது.

பின்னர் ஒழுக்க காண்டத்தைப் பற்றிச் சிறிது நோக்குவாம். ஆன்மாக்க ளிவ்வுலகில் சுகஜீவிகளாயிருத்தற்கும் விண்ணுலகில் நித்திய மோக்சம் எய்துதற்கும் ஒழுக்க காண்டத்திலடங்கிய சன்மார்க்க நெறிகளை யன்றி வேறு சான்றில்லை யெனத் துணிவாய்க் கூறலாம். இச்சன்மார்க்க நெறி பிறழாதவரே இரு வுலகினும் புகழும் பயனும் பெறுவர். இச்சன்மார்க்க நெறிகளெல்லாம் ஒவ்வோர் மதத்திலும் மிகுதியும் ஒருப்போலவே யிருக்கின்றன. இடையிடையே சிற்சில பேதாபேதங்க ளிருந்த போதிலும் பெரும்பான்மை ஒத்திருத்தலால் இக்காண்டத்திலடங்கியவை சச்சரவுகளுக்கிடன் கொடா. இப்பகுதியிற் கூறப்படுவனவெல்லாம் மதத்தினின்றும் புறம்பானவைபோல மனச்சாக்ஷியினுல் மட்டுமே நிர்வகிக்கப்படலாம். ஆகவே இவை மதத்தின் ஓர் பாக மன்றெனக் கூறலுமியல்பே. நிரீச்சுர வாதிகளுக்கு மிவை பொருத்தமே. மிகுதியுமொருப்போலவே யிருக்கின்றன வென்பதால் சிறு பான்மை பேத முண்டென்பது போதரும். உதாரணமாகப் புலாலுண்ணல் சில சமயங்களில் மறுக்கப்பட்டும், ஏனைய சமயங்களில் தவிர்க்கப்படாமலு மிருக்கின்றன. இக்காண்டத்திற் சொல்லப்பட்டவை ஜீவகோடிகளின் நன்மைக்கு அத்தியந்த

ஆவசியமாதலால் அவற்றில் மாறுபட்டோரை ஒறுத்தல் நியாயமே. ஆனால் உலகில் முன்னர் நடந்ததும் தற்காலம் நடக்கின்றதுமான ஹிம்சை யெல்லாம் இச்சன்மார்க்க நெறியிறழ்ந்த காரணம் பற்றியன்றென்பது திண்ணம்.

பின்னர் புராண காண்டத்தைக் கவனிக்குங் காலையும் அதனுள் ளடங்கியவை உண்மையாயிருப்பினும் அன்றிப் பொய்யாயிருப்பினும், அதற்காக நம் மண்டையை யுடைத்து சச்சரவுகள் செய்வது உசிதமன்றென்றும் அதனால் நாம் எய்தும் பயன் றுண்ணிதுமிலை யென்றும், புராண காவியங்களின் உண்மையை நிலை நிறுத்துவதற்காக துற்செய்கை செய்வது தவறென்றும், தெள்ளிதில் அறியக்கூடியது.

முடிவில் முதலாவதாகிய ஞான காண்டம் மத தத்துவ உண்மையைக் கண்டு பிடித்தலையே நோக்கமாக உடையதால், அதை விவகாரத்தால் தீர்மானித்தலே நலம். அதிலடங்கியவை நம் கட்புலனுக்கு அதீதமானவை. மனிதர்களெல்லோரும் ஒரே குணமுடையரல்லர், ஒரே உருவமுடையவரல்லர். அது போலவே கல்வி கேள்விகளிலும் மனோ விவகார நிலைமையிலும் மனப் போக்குகளிலும் மாறுபட்டேயிருப்பர். ஆதலின் மானிடரெல்லோரும் ஒருங்கே ஒரே மதத்தை யநுசரித்தல் வேண்டுமென்பது பிரயாசமே.

இத்தகைய விஷயங்களை அறியாதவர்களே மதமயக்கங் கொண்டு தம் போலிய ஜீவராசிகளை ஹிம்சிக்கமுயன்றும் முயல்பவர்களைத் தடைசெய்யாதுமிருப்பர்.

மேலும் மதஹிம்சையானது சமாதான வாழ்க்கையைக் குறைத்தும் மானிடர் மனதை குரூரப் படுத்தியும் ஜீவகாருண்யத்தை யழித்தும் அகங்காரத்தைப் பெருக்கியும், மனிதர்களைக் கெடுக்கின்றது. ஹிம்சையால் வேஷமாறுதலடைவதே யன்றி மனமாறுதலடைவது கூடாமையால் ஹிம்சையை ஒழித்தல் ஆன்றோர் கடனாகும். மோக்க வீடெய்தப் பற்பல சமயங்களும் பற்பல பாட்டைகளென மொழிந்த மகமதிய புண்ணிய புருஷராகிய, அக்பர் மகாராஜா அவர்கள் வாக்கை சான்றெனத் தலைமேற் கொளினும் மதஹிம்சை தவறென்பது தெளிவாகிறது. ஆகவே மதக்ஷமை ஆவசியமென்பது பெறப்பட்டது.

மதப் பொறுமை வேண்டுமென்பதால். எதெப்படியாயினு மாகுக, எவரெப்படுகுழியில் விழினும் விழுக, என்றெண்ணி யமர்ந்திருத்தல்வேண்டுமென்பது எனது கொள்கையன்று. தனக்குத் தெரிந்த உண்மையைப் பிறர்க்குப் பு

கட்டுதல் நலமே. மானிட ஜென்மம் வாய்த்துள்ளவன் ஒவ்வொருவனுடைய கடனுமதுவே. அஞ்ஞான சாகரத்தினின்றும் பிறனைக் கரையேற்றுவது புண்ணியத்தினும் புண்ணியமே. தம்மினின்றும் மாறுபட்டோரை ஹிம்சியாதிருத்தலும், இகழாதிருத்தலுமே சான்றோர் கடனாகும். பிறதேசங்களுக்குச் சென்று மதப்பிரசங்கஞ் செய்ய விரும்பாததால் மதப் பொறுமையுள்ளவர்கள் நாமே யெனக் கொளலும் சோம்பேறியாய் ஊக்கங் கிஞ்சித்தேனுமின்றி இருந்தவிடமே சதியெனக் கொண்டிருத்தலால் மதக்ஷமையுள்ளவனுவேன் எனக்கொள்ளலுந் தவறெண்ணமே.

உண்மை ஞானத்தை உலகமுழுவதும் பரவச் செய்ய வேணுமென்ற விருப்பமும் அதற்குத் தகுந்த ஊக்கமு மிருத்தலே கற்றறிந்தவர்களுக்குச் சிறந்த ஆபரணமாகும்.

அவ்வண்ணம் பரவச்செய்வதில், விவகாரம், போதனை இரண்டினை மட்டுமே உபாயமாக கைக்கொள்ளுதல் சால்புடைத்து.

இது காறுங் கூறிப் போந்த விஷயங்களை சிறிது சீர் தூக்கிப் பார்த்து, நாம் ஒவ்வொருவரும் கல்வி மிகுந்த இக்காலத்துக் கேற்ப நம் நடையை சீர்திருத்தி மானிடரெல்லோரும் பிறப்பு மாத்திரையில் சமமானவர்களே யெனக்கொண்டு நம்மதத்தா ரல்லாதோரை, புலையன், நீசன் யென இகழாது, அவர்க்குண்மை நெறியைப் புகட்டி அகங்காரம் மமகாரங்களை அடக்கி நன்னெறியினுளென்னாளும் வழுவாது நடப்போமாக.

எல்லாம் வல்ல ஈசர்
நமக்கு என்றும் அருள்
பொழிவாராக.

(முற்றிற்று.)

(7-வது இலக்கத் தொடர்ச்சி.)

பட்சியால் விழுங்கப்படும் கல்லும் மணலும் ஆகாரத்தை தகனம் வருத்துவதிலுதவிசெய்யும். ஆகவே எஞ்சிய வஸ்து மலத் துவாரத்தின் வழியாய் வெளியே தள்ளப்படுகிறது. பட்சிகட்கு பலத் துவாரத்திற்றான் மூத்திரத் துவாரமும் வந்து சேருகிறது.

9. காக்கை வகுப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் நிறபேதமாவது ரூபபேதமாவது இல்லை. ஆனால் கோழி வகுப்பில் சேர்ந்த மயில் முதலிய பறவைகட்கு அவ்விதம் வேற்றுமையுண்டு. ஆண்பறவைகள் பெரும்பாலும் அதிக பலமும் அதிக ஜொலிப்புமுள்ள சிறகுகள் வாய்ந்த தூவல்களும் பலவிதமான பாட்டுக்களும் உடையன. அனேக ஆண் பட்சிகட்கு லிங்கமில்லை. எனினும் பாலுண்ணி அளவுள்ள லிங்கம் மலத்துவாரத்தின் முன்பக்கத்தில் சில பட்சிகட்கு வைக்கப்பட்டுள்ளது. இதே யிடத்தில் பெண்பட்சிகட்கு பெண்ணுறுப்புத் தோன்றும். இதிற்றான் முட்டையின் உற்பத்தி. தவறாமல் எல்லாப் பறவைகளும் முட்டையிலிருந்தே ஜனனம். முட்டையினுள்ளே மையத்தில் மஞ்சள் கருவும் சுற்றிலும் வெள்ளைக் கருவும் காணலாம். குஞ்சுபொரித்தற்கு ரக்தத்திற்கு சமமான சூடு இன்றியமையாதது. முட்டையின் பருப்பத்திற்குத் தக்கபடி குஞ்சு பொரித்தற்கு அதிகநாள் வேண்டிவரும். சில குஞ்சுகள் முட்டையினின்று வெளியில் வந்தவுடன்தானே, தாயுடனிரை தேடப்போகின்றன. சில குஞ்சுகள் கூட்டில் சிலகாலமிருந்து கொஞ்சம் வளர்ந்து பிறகுதான் வெளியே போகின்றன. நாளடைவில் நட்டோரின்னார் என்றும் நள்ளாரின்னாரென்றுந் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் வழியும் படித்துக்கொள்கின்றன. கோழி முதலியன தவிர மற்றப்பறவைகள் எல்லாம் ஒரு பாரிதான் வைத்துக்கொள்ளும். முட்டையிடுவதற்கு சில பட்சிகள் வைக்கோல், இலை, பாசி, சுள்ளிக்கொம்புகள் முதலியவற்றால் தம்முடைய ஒட்டுகிற துப்பலினால் கூடுகட்டுகின்றன. சில பட்சிகள் நிலத்தில் குழிகிள்ளி முட்டைபோடுகின்றன. கூடுகட்டுவதில் சில பறவையினங்களிற் பெண்பட்சியும், சிலவற்றில் இரண்டும் முயலுகின்றன. அநேக கடற்பட்சிகள் ஒரு முட்டைதான் போடுவது வழக்கம். புறாமுதலியன இரண்டு முட்டை போடும். முட்டைகள் ஜாஸ்தியாய்ப் போடுவன பாடுகிற பட்சிகளும் நீந்துகிற பட்சிகளுமாகும்.

10. பறவைகளை அநேகர் அநேக விதம் பிரிவினை செய்திருக்கிறார்கள். அவற்றுள் ஜர்மனி (Germany) தேசத்தில் ஒரு நிபுணர் வரைந்த பாகுபாடு மனதிலெளிதில் பதியக்கூடியது. கீழ்வருமது மற்றெல்லாப் பிரிவினைகளி

லுஞ் சிறந்ததென்று ஈண்டுச் சொல்லுவான் முயலேன். பறவைகள் முதற்கண் I வலிமையுள்ள பெரிய துவல்களமைந்த இறகுகளும் வாலும் மின்மையால் பறக்கக்கூடாதவை (Ratitae) என்றும், உ-ம் தீப்பட்சி. II அவ்விதமுள்ள இறகுகளும் வாலுமுடையதால பெரும்பாலும் பறக்கக்கூடியவை (baritae) என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது வகுப்பின் பிரதானமான உட்பிரிவுகளாவன :— 1 ஊன் உண்பன. உ-ம் கழுகு, பருந்து. 2 நீந்துவன உ-ம். தாரா. 3 நீரில் நடப்பன. உ-ம் நாரை. 4 மரத்திலேறுவன. உ-ம் மாங்கொத்திப்புள். 5 புறவினங்கள். 6 கிளையிலிருப்பன. 7 அடைக்கலான் குருவி இனங்கள். மேற்கூறிய உட்பிரிவுகளின் பொது இலக்கணம் கால்விரல்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதமாகும்.

11. இது நிற்க. இப்போது பூலோகத்தின் கண் வசிக்கும் முக்கியமான பறவைகளை மட்டும் இங்கு சிறிது விவரிப்பாம். எல்லாப் பட்சிகளைப் பார்க்கிலும் தீப்பட்சி அல்லது தீவிழுங்கிப்பட்சி மிகப் பெரிது. அது எட்டடி உயரமுள்ளது. அது உஷ்ணமுள்ள விஸ்தீரணமான மணற்காடுகளிலும் செடிமட்டுமுள்ள வனங்களிலும் குடியிருக்கும். இதற்கு காலில் இரண்டு விரல்கள் உண்டு. இதை ஒட்டகப்பட்சி என்றுஞ் சொல்வார்கள்; வேகமாய் நடந்தால் தன் இரண்டு சிறகுகளையும் உயர்த்திக்கொள்ளும்; விரைவாய் ஒரு அடி எடுத்து வைத்தால் நமக்கு இருபத்தைந்து அடியாகும்; நதிகளிலும் கடலிலும் கழுத்தளவிறங்கி நீராடும். இதின் முட்டை கோழிமுட்டை பன்னிரண்டுக்குள்ள பருப்பமுண்டு. இதின் துவல்களை ஐரோப்பாவிலும் வேறு தேசங்களிலும் ஆபரணமாகத் தரித்துக் கொள்வார்கள். இது தீயை விழுங்காது. காட்டில் சுவாதந்திரியத் தடனிருக்கும்போது பழவர்க்கங்களும் இலை முதலியனவும் உண்ணும். பிடித்து வளர்த்தால் பலவிதமான பூச்சிகள் ஊர்வன முதலியவற்றைப் புசிக்கும்.

12. கிளிகள் வழக்கமாய் தனியே இராமல் திரளாகக்கூடி மனிதர்கள் பேசுவதுபோல சத்தமிட்டுக் கொண்டு வழி மருங்குகளில் வளரும் மருதமரங்களிலும் புல்காடுகளிலும் பயிர் செய்த நிலங்களிலும் மலைப்பக்கங்களிலும் குழுமியிருக்கும். இவைகள் ஆகாயத்தில் அதிக உயரத்தில் பறவாமல் புளியங்காய், ஆலம்பழம், அத்திப்பழம் பலவித இலைகள் முதலியன தின்னும். நெற்கதிரை தன் அலகினாலறுத்து காலில் ஏந்திப் பிடித்துக்கொண்டு வயற் பக்கத்திலிருக்கும் மரங்களுக்குப் பறந்து போகும்.

7. உலகெல்லாம் பொய்யாகி ஒதுங்கினும் பொய்யென்னும்
உணர் வொன்று மெய்யாதல் உறுதியே; யவ்வுணர்வும்
இலகுமிடம் மெய்யாதல் வேண்டும்; இன்றேல் ஈங்கு
இடமின்றிக் கரண *மின்றி இயலு மன்றோ பொருள்கள்?

8. † ஆதாரமற்ற பொருள் அங்கு மிங்கு மில்லை
ஆதலினால் உணர்வுடைய அகக்கரணம் மேலும்
சூதானமாங் கரணம் தோற்றுவிக்குங் கருவி
தொடுத்தியன்ற மெய்யினையும் மெய்யென்று துதிமின்.

9. எக்காலும் மாறிவரு மிக்காயம் பொய்யேல்
இன்ப துன்பமெனு நிலையும் பொய்யாகும்; ஆயின்
புக்காலும் புகர்கரிய பொய் யெனு மில்பொருளில்
போற்றுதற்காம் வேற்றுமையும் பொருந்து மெனல் புதுமை.

10. கல்லெனினும் புல்லெனினும் கருதிடில் ஒன்றன்றே
கல் ஆவை யருத்திடலாம், புற்கோட்டை செயலாம்;
நல்ல சுவைப்பாகும் கசப்பாகும், நரி பரியாம்
நாய் வேங்கையாய் வேங்கை நாயாகிக் குரைக்கும்.

11. பொன் னெடுப்பின் மண்ணெனவே பூமியில் விட்டெறிவர்
புறங்கிடக்கு மோடரித்து பொக்கிஷத்திற் சொரிவர்
அன்ன மெலாம் நஞ்சமென அகற்றுவர் நஞ்செனிலோ
அமுதமென வுட்கொண்டு அகக்களிப்பு முறுவர்.

12. பொடி யெடுத்துக் கண்ணிடுவர், பூச்சுவைத்துப் புசிப்பர்,
புனித நறுங்கனி காதில் பொருத்துவர், பொற்பமையும்
வடிவென்றால் கண்மூடி முகப்பர், வகுத்திடினே
மன்னுயிரும் உலகும் இயல் மாறினும் மாறுவே.

13. வான வெளி நோக்குமின் வெண்மதியென்ன, அதன்மேல்
வருஞாயிறென்ன மனமருவரிய சேய்மை
யான வெளி தனிற் சுழலும் மீனென்ன தானே
அத்தனையும் பொய் யென வோர் பித்தனும் பேசானே.

* 'காரணம்' குறுக்கல் விகாரம் பெற்றது.

† "வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை" என்ன வழங்கும் பழமொழிக் கேற்ப.

14. மலையும் மலங்குற மலையும் மாருதத்திற்பட்டே
மாறு மலை சிற வருமாறும் கனிவிட்டே
உலையுமொரு கலமிருக்கினன்றே இவ்வுலகம்
உளதெனவும் இலதெனவு முரைப்பதற் கோரிடனும்.

15. பலருறையும் நாடறியாப் பழமை கவின்றொளிரும்
பழுவமும் அப்பழுவநிறை சூழலும் சூழ் மலரும்
மலருறையும் மணமும் மணத்துறையும் மனமகிழ்வும்
மதியாது நிற்பதற்கு விதியாது புகலீர்.

16. மன்றலள்ளி வீசுமிளந் தென்றல் தனியிசையும்
வாவியினும் காவினும் புள் கூவிமுரல் குரலும்
குன்றின் வீழருவி செயுங் குரவையுங் காதாரக்
கொள்ளுபவரிவை பொய்யென் றெள்ளுவரோ நேர?

17. தாயென்று சாற்று முனர் தாங்கரிதா யெவர்க்கும்
தசவென்ப அகமூடே புகுமென்ப சரதம்
சேயென்ற போதெவர்க்கும் சிந்தை கசிந்துருக்கச்
செம்மவரு பொம்மல் நிலை தெரிப்பதெவர் தேறி?

18. கற்பாருங் குணமே தம் பொற்பாருங் கலனாய்க்
கைக்கொண்ட மடவாரே மெய்க்கொண்ட துணையாய்
இற்புடையில் பெறுமின்பம் சிற்றின்பமென நீர்
இகழ்கினு மவ்விகழ்கருதி இல்துறப்பர் எவரே?

19. தாயென்றும் சேயென்றும் தாரமென்று முள்ளிற்
றழைத்தோங்கு மருத்தியுளார், சார்பிலரேபோல
வாயொன்றினாலேயே மனப்பற்றொன்றிலதால்
வையகமில் பொருளெனவும் மதித்துறைய மாட்டார்.

20. பற்றறுத்தார் உய்த்துணரின் பற்றறுத்தாராகார்
பந்தம் வெளி பாறினும் உட்பாறுவதுமில்லை,
சுற்றத்தார் தமை விடினும் "சுமந்து திரிதேகத்"
தொழிலுணர்ச்சி தமை விடுதல் சொற்பனத்து முடியா.

21. ஆதலின் இவ்வகிலம் மெய் ஆங்குறை பல்லுயிர்கள்
யாவும் மெய் அவை ஈங்கு மேவுவதற்கான
நீதியலா வின்பம் மெய் அவ்வின்பம் சேர
செய்யும் வினை தேர்ந்தியற்றி உய்யுமுறை தேரீர்.

இல்வாழ்க்கை.

(பெங்களூர் பாப்டிஸ்ட்டு மிஷன் பாதிரியாராகிய கனம். பி. எஸ். டி. முத்துசுவாமிப் பிள்ளை அவர்கள் பிரசுரித்த தண்டெப்பத்திரதில் நின்றும் எடுக்கப்பட்டுள்ளது)

“ இவ்வுலகின்கண் அதமர், மத்திமர், உத்தமர் என மூவகை மக்கள் வசிக்கின்றனர். இவர்கள் தங்கள் மனதில் சமாதானத்தைப் பெற்று வாழ விரும்பி, பல முயற்சிகள் செய்துவருவது யாவருக்குந் தெரிந்த விஷயமேயாம். அவற்றில் ஒன்று விவாகமென்று சொல்லத்தகும். அழகு, ஐசுவரியம், அந்தஸ்து, கல்வி, நன்னடக்கை, தேவபக்தி ஆகிய இவ்வாறும், விவாகஞ் செய்துகொள்ளுகிறவர்களுக்கெல்லாம், பொதுவாய் இன்றியமையாமலிருக்கவேண்டியவையாயிருந்தும், அவற்றில் அதமர் முக்கியமாய் அழகையும், ஐசுவரியத்தையும், மத்திமர் அந்தஸ்தையுங், கல்வியையும், உத்தமர் நன்னடக்கையையுந், தேவபக்தியையும் விரும்புகின்றனர். இம்மூவரில் உத்தமர் விருப்பமே சிறந்தது. அதுவே மனோபாக்கியமாகிய சமாதானத்தைக் கொடுக்கக்கூடியதென்று அறிஞருங் கூறுகின்றனர். எவ்வாறெனில் :—

“ நன்னடக்கைகளாகிய சுத்தம், சுறுசுறுப்பு, உண்மை, கீழ்ப்படிதல், பொறுமை முதலிய பஞ்ச இலட்சணங்களையுந் தேவதாபக்தியென்னுஞ் சாட்டிர்கோத்து, அணிந்திருக்கும் ஸ்திரீயை யெவனொருவன் தனக்கு இல்வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளுகின்றானோ, அவனே பாக்கியவான். இதைக் கருதியே “ ஏர் பிடித்துழுகிறவன் என்ன செய்வான்? படிபிடித்தளக்கிறவள் பாக்கியம்” என்னும் பழமொழியும் உலகத்தில் பிரசித்தமாய் வழங்கப்பட்டு வருகின்றது.

இல்லறந் தேவநியமகம் :—சர்வஜீவ தயாபரராகிய சிருஷ்டிக் கடவுள், தம்மை வணங்கவும் ஸ்தோத்திரிக்கவும், சகல ஜீவாத்துமாக்களுக்கும் பிரயோசனமாயிருக்கவுமே, ஆதியில் ஒரு மனிதனைச் சிருஷ்டித்தார். ஒருவன் தனியேயிருந்தால், இத்தப் பரிசுத்தமும் உத்தரவாதமுமான கடமைகளைச் செய்ய இயலாதவனாயிருப்பானென்பதை அவரறிந்து, அந்த ஆதிமனிதனுக்கு ஒரு பெண்ணை இல்வாழ்க்கைத் துணைவியாக உண்டாக்கினார். இக்கருத்தையொத்தே “ கலியாணமில்லாதவன் கையில்லாதவன்,” “ ஆடவளில்லாதவன் அரையாண்பிள்ளை,” “ மனைவியற்றவன் மேன்மையற்றவன்” என்னும் முதுமொழிகள் கடவுளுடைய நியமகத்தை யாவரும் நிறைவேற்ற வேண்டுமென்று, இந்நாள் வரையிலும் முறையிட்டுவருகின்றன.

மனையாளின் மேன்மை :—ஒரு மந்திரி தன்னரசனுக்கு எவ்வாறிருக்கின்றானோ, அவ்வாறே ஸ்திரீயுந் தன் நாயகனுக்கு இருக்கின்றாளென்பது நிச்சயம். சுத்தம், சுறுசுறுப்பு, உண்மை, கீழ்ப்படிதல், பொறுமை, தேவபக்தி முதலிய ஆறு லட்சணங்களையும்' ஆபரணம்போல் அணிந்திருப்பவனே அமைச்சனாம். அவ்வாறே, மனையாளென்னப்பட்டவளும் இவ்வாறு இலட்சணங்களையும் அணிந்திருக்க வேண்டியது அவசியமாம். இதனால் தான் "குடித்தனமோ துரைத்தனமோ" என்னும் முதுரையும் வழங்கப்பட்டு வருகின்றது.

மனையாள் செய்யவேண்டிய கடமை :—அரசனுடைய வரவு செலவு எவ்வளவென்றும், மித்துரு சத்துரு எவரென்றும், குடிகளைப் பட்சத்தோடு தேவநீதியில் நடத்துவது எவ்வாறென்றும், தேசத்திற் சமாதானத்தை யுண்டாக்கும் வகையின்னதென்று மறிந்து, அரசனுக்கு மேன்மை யுண்டாகும்படியாக, இராஜ காரியங்களை நடத்துவதே மந்திரியின் கடமையாம். அதுபோல, நாயகனுடைய வரவுசெலவு இவ்வளவென்றும், மித்துரு சத்துரு இன்னாரென்று மறிந்து (பிரஜைகளைப் போற் காணப்படும்) பிள்ளைகள், பந்துக்கள், அயலார் சிநேகிதர் முதலியோரை யுண்மையிலும் நீதியிலும் நடத்த முயன்று நாயகனுக்கு அபகீர்த்தி வராதிருக்கும் வண்ணம், குடும்ப காரியங்களை நடத்திவருவதே மனையாளின் கடமையாம்.

மேலும், இல்லறவாழ்க்கையிலிருக்கும் ஸ்திரீயும் புருஷனும், எவ்வாறு ஒருவருக்கொருவர் தேவ நியமகப்பிரகாரம் நடந்துகொள்ள வேண்டுமென்பது, முதியோர்களின் வாழ்த்துதலினால் தெளிவாய் விளங்கும். எவ்வாறெனில், மணவறையிலிருக்குந் தம்பதிகளாகிய மணமக்களை முதியோர் பார்த்து.—"தீபத்தின் ஒளியும் அனலும் போலும்," "மலரின் மணமும் நிறமும் போலும்," "விரலின் நகமுஞ் சதையும் போலும்"—நீங்களிருவரும் ஒருமித்து வாழ்வீர்களாகவென்று அருள்வாக்குப் பொழிவது நமது தேசத்தில் இயல்பு. அவற்றின் பொருள் யாதெனில் :—

(1) தீபத்தின் ஒளியும் அனலும் போல், ஸ்திரீயும் புருஷனும் ஒருமனப்பட்டு வாழ்வதே நீதி :—அனலின்றி ஒளியிராதென்பது திண்ணம். எதாவதொரு வஸ்துவில் அனலின்றி ஒளியிருக்குமாயின் மனிதருக்குப் பிரயோசனமாக இரவில் வெளிச்சத்தைக் கொடுக்கும் அனலோடுகூடிய தீபத்திலுண்டாகும் ஒளியாயிராது என்பது நிச்சயம். மனைவியானவள் தன் கணவனுடைய மேன்மை யென்னும் ஒளி

யாயிருக்கின்றாள். ஆகையால், எவனும் இல்லறவாழ்க்கையில் ஸ்திரீயின்றி மேன்மைபெறவியலாது. அனலிலிருந்து ஒளியையாவது, ஒளியிலிருந்து அனலையாவது பிரிக்க முடியாது: பிரிக்க முயன்றால், அவ்விரண்டு மில்லாமற்போகும். கொழுநனையுங் காதலியையும் பிரிக்கமுடியாது. ஸ்திரீயாவது, புருஷனாவது, அல்லது இருவருமேயாவது (நல்லவர்களைப்போல் நடிக்கும்) தூர்த்தரின் துராலோசனைக்குச் செவிகொடுப்பார்களேயாகில், ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து, துஷ்டர்வசமாகி, கனவீனமடைந்து, தங்கள் காலமெல்லாம் அவமானத்தால் மூடப்பட்டு, தன்னந்தனியே நின்று, கலங்கித் தவிக்க நேரிடும். ஆகையால் இல்லறவாழ்க்கையி லிருக்கிறவர்கள் "நிதானம் பெரியதானம்" என்னும் முதுமொழிப்பிரகாரம் எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் நிதானமாய் யோசித்து நடப்பது அவசியமாம்.

(2) மலரின் மணமும் நிறமும் போல் கணவனும் மனைவியும் அன்பு பாராட்டி வாழ்வதே நீதி :—இவ்வுலகின்கண் வசிக்கும் மானிடர் யாவரும் நல்ல நிறமும் வாசனையும் பொருந்திய புஷ்பத்தையே விரும்புவது இயல்பு. நிறமாகிய கொழுநனும் வாசனையாகிய மனைவியும் ஒரு மனப்பட்டு வாழ்வதே மலர்போன்ற குடும்பமென்னப்படும். வர்ணத்திலிருந்து வாசனையையாவது, வாசனையிலிருந்து வர்ணத்தையாவது பிரிக்கமுடியாது ; பிரிக்கமுயன்றால் கசக்கவேண்டியதாகும் ; அவ்வாறு செய்தால், நல்ல நிறமும் வாசனையும் மாறி, புஷ்பமாகக் காணப்படமாட்டாது. அதுபோல, காதலனையுங் காதலியையும் ஒருவரிலிருந்து ஒருவரைப் பிரிக்கமுடியாது. கணவனாவது, மனைவியாவது அல்லது இருவருமேயாவது, ஒருவரை யொருவர் தூஷிக்கவுந் துன்பப்படுத்தவு மெத்தனித்தால், புஷ்பத்தைக் கசக்கினவுடனே எவ்வாறு நிறங்குன்றி, மணமாறி, எதற்கும் பிரயோசனப்படாமற் குப்பையிலெறியப்படுமோ, அவ்வாறே இவர்களும் யாவராலும் இகழப்பட்டு, சன்மார்க்கர் நடுவிலிருந்து நீக்கப்படுவார்கள். ஆகையால், ஒருவர் செய்யுந் தப்பிதத்தை யொருவர் பொறுத்து, எவ்விஷயத்திலும் நிதானமாய் நடந்துகொள்வதே மேன்மையாம்.

(3) நகமுஞ் சதையும்போல், இல்லாளும் நாயகனும் ஒத்து வாழ்வதே நீதி :—விரலில்லாத கைகளையுடையவன் ஜீவனோடிருக்கும் புழுவுக்குச் சமானமானவன். ஏனெனில், விரலில்லாவிடில் எவ்வகைவேலையும் செய்ய முடியாது. விரல் மனிதனுக்கு மகா அவசியமான உறுப்பாம். விரலானது நகமில்லாதிருந்தால், பூணில்லா உலக்

கைபோலும், இலாடமில்லாக் குதிரைபோலும் பிரயோசனமற்றுப் போகுமென்று சர்வஞானரறிந்து விரலைப் பாதுகாக்கவும், அதற்கு உதவிபுரியவும், நகத்தை விரலின் நுனியில் அமைத்திருக்கின்றார். இவ்வளவு பிரயோசனமுள்ள நகத்தைத் தன்னளவிற்கு மிஞ்சிவளரவிட்டால், நம்மையுங் காயப்படுத்தி வருத்தத்திற்குள்ளாக்கி, தானுஞ் சடுதியாய்த் தன்னிடம் விட்டுப் பெயர்ந்து, விழுந்துபோகும். அது கடைசியாக, எவ்வகை வேலைக்கும் பயன்படாமல், குப்பையிலெறியப்படும். ஆகையால், அதை அளவிற்கு மிஞ்சி வளரவிடாமல், அடிக்கடி மெதுவாய்ச் சீவி வரவேண்டியது மகா அவசியமாம். "இல்லாளில்லா வீடு இடுகாடு," "தாய்க்கு இரண்டாவது தாரம்," "துணைவியில்லா வீடு துறந்தமண்டபம்," "பண்ணுடிச்சியில்லாப்பண்ணை பாழாகும்," "மனைவியில்லா வீடு மண்மேடு" என்னும் முதுமொழிகளின் கருத்தின்படி மனைவியானவள், விரலுக்கு நகத்தைப்போல், இல்லறவாழ்க்கைக்கு இன்றியமையாதவளாயிருக்கின்றாள். இவ்வளவு பிரயோசனமான, "இல்லறமாணிக்கம் போன்ற," இந்த வாழ்வரசியைத் தன்னிஷ்டப்பிரகாரம் நடக்க இடங்கொடுத்தால், நாயகனையும் இழிவுக்குள்ளாக்கி, தானுந் துன்பத்திற் சிக்குண்டு, அவமானத்தால் மூடப்பட்டு, தன் காலமெல்லாம் ஆதரவற்று, அலைந்து திரிய ஏதுவாகும். ஆகையால், ஒருவன் தன் மனைவியை நேசிப்பது உண்மையாயிருந்தால், "அடக்கம் ஆயிரம்பொன்" என்னும் மூதுரையின் கருத்தை அவளுக்கடிக்கடி விளக்கிக்காட்டி, அவளைத் தன்னதிகாரத்திற்குள் வைத்து, மரியாதையாய் நடத்திவருவதே உத்தமமாம்.

(4) மதர்நீதுநந்த நவமணி மாலை :—"ஆளனில்லாதவள் அரைப்பெண்பிள்ளை," "நாயகனில்லாதவள் நலமில்லாதவள்" "கணவனில்லாதவள் கால்பெண்பிள்ளை," "கொழுநனற்றவள் கொண்டையற்றவள்," "பெருமாளிருக்கும் வரையில் திருநாள்," "மணவாளனுள்ளளவும் மகிழ்ச்சி," "சுவரை வைத்துக்கொண்டல்லவோ சித்திரமெழுதவேண்டும்," "கல்லானாலுங் கணவன், புல்லானாலும் புருஷன்," "ஆனைகட்டிவாழும் அப்பன் வீட்டைப் பார்க்கிலும், பூனையிருந்துவாழும் புருஷன் வளவுமேல்"—இந்த நவமணிகள்போன்ற பழமொழிகள், நம்முடைய தமிழ் நாட்டில், பலவிடங்களிலுஞ் சாதாரணமாய் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றின் கருத்தை நோக்குமிடத்து, ஸ்திரீகளுக்குத் தங்கள் கணவர்களாலேயே சகல மேன்மையுமுண்டாகின்றனவென்று தெளிவாய் விளங்குகின்றது. மேலும், நம்முடைய அநுபவமும் இதற்குச் சாட்சியாயிருக்கின்றது. ஆகையால், இந்த நவமணிமாலையை யெந்த தர்மபத்தினி தன் இதயத்தில், அன்புடனணிந்து நடக்கின்றாளோ, அந்த அம்மணி யாவராலும் எக்காலத்திலும் புகழப்படுவாள். இஃதன்றி, "பாடுபட்டவள் பட்டம் பெறுவாள்" என்னும் பழமொழியொன்றுண்டு. அஃது மாதர்களுக்கோர் "கிரீடம்" போன்றது. எந்த ஸ்திரீ தன்னாயகனுக்கு உண்மையுள்ளவளாயிருந்து, அவன் குடித்தனத்தை ஊக்கத்தோடு நடத்தி சுற்றத்தார் அயலார் முதலியோருக்கு நன்முன்மாதிரியாய் நடந்து வருகின்றாளோ, அவள் "உத்தமி" என்னும் பட்டத்தை நிச்சயமாய்ப் பெறுவாள். சுபம்!"

இராவூணின்றித் தெருவில் வந்து கூப்பிட்டலையும் ஏழைகளைக் கண்டால் அவர்களுக்கு ஏதேனுஞ் சிறிது பொருளுதவி செய்தும் வந்தனள்; பாழ்பட்டுக்கிடக்கும் நாட்டின் நிலைமையைக் கண்ட அவள் மனமிகச்சலித்தது. பேரிழவு நேரிட்ட வீடுபோலவே யந்நகரி முழுதும் துயரத்திலாழ்ந்திருந்ததென்க. இரப்பாளிகளுக் கேதேனுங் கொடுக்குஞ் சமயங்களில் அவர்கள் தன்னை யின்னுளென்று அறிந்திடா வகை முகத்தை மறைத்துக்கொண்டே கொடுத்துவந்தனள்.

இப்படிச் செய்துவருகையில் ஒருநாள் ஏழைகள் மிகுதியாய்க் குடியிருக்கும் ஒரு தெருவின் வழிவர அங்கே ஒரு குறிசொல்பவளிருக்கிறாளென்றும், அவளிடத்தில் பற்பல அறியாமை மீக்கொண்ட ஜனங்கள் நாடோறும் சென்று அவரவர்க்குள்ள துன்பங்களைக் கூறி யவற்றிற்குப் பரிகாரம் கேட்டுவருகிறார்களென்றும், அவள் குறிசொல்வதில் மிகத்தேர்ந்தவளாகப் பலரால் மதிக்கப்பட்டு வருகிறாளென்றும், ஜனங்களுக்கவ்விடத்தில் மிக்க பயமும் பற்று முண்டென்றும் இளவரசி அறிந்துகொண்டாள். இவள் ஓர் தெய்வங் கொண்டாடியாகவே மதிக்கப்பட்டு வருகின்றனள் என்பதையும் இவள் கேட்டவர்களுக்கு வேண்டிய வரங்களையெல்லாம் கொடுக்க மாற்றலுடையவளாகக் கொண்டாடிவரப்பெறுகின்றனள் என்பதையு மறிந்து தனக்குத் தற்காலம் நேரிட்டிருக்கும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு பாயமின்ன தென்றவளைக் கேட்டறிந்துகொள்ளவும், தன்னுடைய பாக்கிய மின்ன விதமானது என்று நிதானித்துக் கொள்வதற்கும் நிச்சயித்து அக்குறத்தி வாழும் வீட்டுவாயிற் கதவைப்போய்த் தட்டினாள். இங்ஙனஞ்செய்யும்பொழுது அவள் நெஞ்சம் படபடவென்று துடித்ததென்று யான் கூறவேண்டியதில்லையே. தன் முகத்தையும் தானுடுத்திருந்த ஆடையின் ஓர்தாணையால் நன்கு மறைத்துக் கொண்டனள். ஏழெட்டுப்பத்துத் தட்டுத் தட்டியும் ஒருவரும் பதில் சொல்லுவதைக் கேட்டிலள். உள்ளேயிருந்து ஒரு பூனைகத்துகிறதுபோன்ற சத்தமுமவள் செவியிற்பட்டது. கதவிடுக்கின் வழியா யுள்ளே உற்றுப்பார்க்கையில் அங்கோர் விளக்குத் திமிதிமி யென்றெரிந்து கொண்டிருக்கிறது. மறுபடியும் கதவைப் படபடவென்று தட்டினாள். அதற்கும் பதிலில்லை. இவளுடைய ஆத்திரத்திற்கோ கங்குகரையில்லாதாயிற்று. உடனே கதவை மிக்க வூக்கத்துடன் உந்தித்தள்ள அது படீரெனத் திறந்தது. அவளும் பேராவலுட னதற்குள் புகுந்தாள். அங்கு ஒரு சதுரமான அறை யி

ருந்தது. அதன் முகடு மிக்குயரமுடையது; அதன் நடுவில் ஒரு பெரிய நிலை விளக்கு எரிந்துகொண்டிருந்தது; இதிலிருந்தெழும்பிய புகை சுருள் சுருளாய் அவ்வறையின் முகட்டில் மிதந்து சொல்லா நிற்கக்கண்டாள். அறையின் ஒரு பக்கத்தில் ஒரு தட்டியும் வைக்கப்பட்டிருந்தது; அப்புறம் ஒரு பெரிய சார்மணையும் வட்டமேசையும் இடப்பட்டிருந்தன. அவ்விளக்கைச் சுற்றிச்சுற்றி யொரு கொழுத்த கரும்பூனை வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இளவரசி மெல்லிய குரலுடன் 'அங்கிருப்பது யார்' எனப் பல முறை கேட்டும் பதில் கிடையாததால் உரக்கக் கூப்பிட்டுப்பார்த்தாள். அதற்கும் பதில் கிடைக்கவில்லை. உடனே அவள் சார்மணையின் கிட்டப்போக அங்கிருந்த பூனை மியா! மியா! என்று சத்தமிட்டுக்கொண்டு அவளது உடுப்பின்மேல் பரண்டிற்று. அதைக்கவனியாது அங்குலரிடம்விடாமல் அவள்தேடிப் பார்த்தும் அந்த அம்மன் கொண்டாடி அகப்படவில்லை. யாதுகாரணத்தாலோ அவளவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாள் என்பது புலப்பட்டது; அவளங்கிருந்த அடையாளமே ஒன்றுங்காணவில்லை. ஊரார் இவளுடைய விரகை யறிந்துகொள்ளக் காலமாயிற்று என அஞ்சியோ, அல்லது யாரையேனும்பெருமோசஞ்செய்து பெருந்தொகையைக் கைவசப்படுத்திக் கொண்டோ, வேறெக் காரணம் பற்றியோ அவளவ்விடம்விட்டுப் போய்விட்டனள். ஒருவேளை நள்ளிருளில் வெளியிற்போய் ஆற்றோரமாய்ச் சஞ்சரித்துக் கொண்டிருந்தபொழுது கண்தெரியாமல் இடிகரையிற் காலைவைத்து ஆற்றில் விழுந்து பிரவாகத்தாலிழுத்துக்கொண்டுபோகப் பட்டுமிருக்கலாம் என்று நினைக்கவு மிடமுண்டு. எப்படியாவதிருக்கட்டும். அன்று காணாமற்போனவள் பின்திரும்பிச் செல்வநாட்டிற்குள் பிரவேசித்திருப்பதில்லை என்பது மாத்திரம் நிச்சயம். ஆனால் அந்நாட்டார்க்கு அவள்போய்விட்ட செய்தி அப்பொழுது தெரியக் காலமாகாதிருந்ததால் அவளங்கிருக்கிறதாகவே எல்லாரும் மதித்துவந்தார்கள். அவளங்கில்லையென்பது செல்வியாளுக்கு மட்டும்தான் தெரிந்தது.

விளக்கின் கிட்ட இளவரசி நின்று அதிசயத்துடன் பார்த்துக்கொண்டே சிறிதுநேரம் கழித்துவிட்டு இனிச்செயற்பாலதியாதென மனதிலாலோசித்துப் பார்க்கையில் யாரோ வந்து கதவை யுரக்கத்தட்டினார். உடனே அவ்விடத்தினின்றும் தப்பி வெளியிற் போவதற்கு வழி யெங்கேனு

முளதோ என்று பரபரப்புடன் செல்வியாள் நான்கு புக்கமும் பார்த்தும் ஒரு வழியும்புலப்படவில்லை. அவளவ்விடத்தில் வைத்துப் பிடிபட்டால் அவளுக்குப் பெருங் கேடுவிளையுமென்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். பக்கத்தில் சித்திரம் வரையப்பட்டிருந்த ஒரு ஆடை கிடந்தது அவள் கண்ணுக்குப் புலப்பட அதனை யெடுத்துத் தன்னுடல் முழுமையும் வெளியிற் காணாமல் மூடிக்கொண்டாள். உடனங்கிருந்து விளக்கின் முற்புறமாக வந்துநின்றுகொண்டு “கதவைத் தட்டுகிறது யார்?” என்று கேட்போர் அஞ்சும்படி கேட்டாள்.

நான்காவது அதிகாரம்.

இவள் அதிவிசேஷமான தேவராட்டியே!

மெல்ல மெல்லக் கதவைத்திறந்துகொண்டு ஒரு மனிதன் உள்ளே சென்றனன்; செல்வியாள் தான் மூடியிருந்த போர்வையின் வழியாய்ப்பார்க்க அவன் அந்நாட்டில் வெகுநாளாய்த் தோல் பதனிட்டுக் காலங்கழித்துவரும் ஓர் சக்கிலியன் எனத்தெரிந்துகொண்டாள். அவனுடைய கடை சந்தைக்கடுத்த வீதியிலுள்ள தென்பது கூட அவளுக்குத் தெரியும். அவனோர் உபாயமான வியாபாரி. அங்கிருக்குந் தேவராட்டி நரைத்துத் திரைத்துக் கூனிக்குறுகியிருப்பாள் என்று அவன் நினைத்திருந்ததற்கு மாறாக அப்பொழுதவன் அங்கு நிற்கக்கண்ட உருவம் ஆசானுபாகுவாய் அதி கம்பீரமான தோற்றத்துடன் நிமிர்ந்து நிற்பதைக் கண்டு சிறிது திகிலடைந்தான்.

“நீ தேவராட்டியில்லை யென்று நானுண்மை சொல்லுவேன்” என்று திடீரென்று சிறிது மாலோசியாமல் முரட்டுத்தனமாய்ப் பேசினான். இளவரசி தன்னுள்ளூற இதைக் கேட்டுச் சிறிது நகைத்தாள்.

“என்னிச்சைப்படி யெல்லாம் என்னுருவத்தை மாற்றிக்கொள்ளு மாற்றல் என்னிடத்திருப்பதே யான் தேவராட்டி யென்பதற்குப் போதுமான சான்றன்றோ? நீ யிங்குவந்ததென்? கூறுதி” என்றாள்.

அந்த மனிதன் தன்னைக்கட்டிக் கொள்ளுகிறவன்போல வாயினால் சில மந்திரங்களை மறையாய்க் கூறிரக்ஷாபந்தம் செய்துகொண்டான். அக்காலத்திலவன் மார்பு படபடவென்றடித்ததைக் காணலாம்; அவன் நாசியிலிருந்துவரு மூச்சு அவ்விளக்கை அணைத்துவிடும் தகுதியுடையதாயிருந்திருக்குமென்பதற்குஞ் சந்தேகமில்லை. சிறிது நேரங்கழிய அவனுக்குத் தைரியம் பிறந்தது.

"புதிய அரசன் எங்களுக்குப் புதியவரிகளேற்படுத்தி யிருக்கிறார்; நானே மிக ஏழை; இவ்வரிப்பணம் செலுத்த ஒருவழியும் நான் காணேன். நாளை நடுப்பகலில் அதிகாரி வந்து என்னுடைய தோல முழுதையும் வாரிக்கொண்டு போய் விடுவன்; நான் வேலைசெய்து காலங்கழித்தற்காக வைத்துக் கொண்டிருக்கும் கருவிகளையுங் கொண்டுபோய்விடுவன்; அதற்குள் பணங்கிடைத்தால் இந்தக் கெடுவிற்குத் தப்பினேன்; இன்றேல் என்கதி அதோகதிதான். இவ்விடையூறிலிருந்து என்னை விடுவித்துக்கொள்வதற்கு நான் என்ன முயற்சி செய்தல் தகுமென்றெனக்குத் தயை கூர்ந்துரைத்தல் வேண்டும்" எனப்பிரார்த்தித்தனன். தேவராட்டி தன்பையிலிருந்து சில நாணயங்களையெடுத்து அவனுக்குக் கொடுத்து விட்டு "இவ்வளவு தொகை போதுமா?" என்று கேட்டனள். அச்சக்கிலியன் இந்த நாணயத்தை வாங்கித்திரித்தும் மறித்தும் பலதரம் பார்த்துப்பார்த்துச் சந்தேகர்தெளியாதவனைப் போல் நின்றான். இவை உண்மையான பொன்னாணயந்தாமோ இல்லையோ என்ற சந்தேகம் அவனுக்குத் தீராததனால் ஒவ்வொரு நாணயமாய் எடுத்துப் பல்லுக்கிடையிற் கொடுத்துக் கடித்துப் பார்த்தான். இச்செய்கையையெல்லாங்கண்டு தேவராட்டி சிரித்தாள்.

"என்னிடத்தில் மாய நாணயமொன்றுமில்லை. நீ பயப்படாதே. பொழுது விடிந்தவுடனிவை களிமண்ணாய் விடுமோ என்ற சந்தேகமுனக்குவேண்டாம்; இவை நல்ல பொன்னென்பதற்குத் தடையில்லை. இதைக் கொண்டுபோய் நீ கொடுக்கவேண்டிய வரிக்குச் செலுத்திவிட்டுச் சுகமாயிரு" என்று சொல்லி அவனை விடுத்தாள். அவனும் ஏராளமாய் வந்தனங்கள் சொல்லிப் பணத்தை முந்தியில் முடித்துக்கொண்டு சரேலென வெளியிலிறங்கி மிக்க மனக்களிப்புடன் வீடுநோக்கி யோடினான். இளவரசியும் மேற்போர்வையை எடுத்தங்குவைத்துப் பின் எரிந்து கொண்டிருந்த விளக்கை யணைத்து விட்டு வெளியேவந்து தெருவழியாய் நடந்து அரண்மனை மதிலின் வாயிலிற் புகுந்து உள்ளே சென்று கதவைப் பதிவுபோல் அடைத்து விட்டுத் தன்னறையிற் புகுந்து படுத்துக் கொண்டாள்.

இத்துணிவு அவளுக்குப் பேருக்கமளித்தது. தான் இன்னாரென்றறியப்படாமலே மறை வேடம் பூண்டு பிறர்க்குதவி செய்வதற்கிஃதோர் நல்ல உபாயமாயிருக்குமென்று நினைத்து இளவரசி இராமாறு இப்படியே ஒரு குறித்த சமயத்திலவ்விடஞ் சென்று தன்னிடம் வந்து குறிகேட்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் புரிந்து வரத்தலைப்பட்டனள்.

பொருவறு குமார புரகர் செய்தவம்
ஓருரு வமைந்தா லொத்த வுத்தமன்
வார்பெறு கிருஷ்ண வரோதய புத்திரன்
தன்னிக ருற்ற தயாளனுங் கிலமுதல்
பாஷாஞானப் பண்டித சிரோமணி
கார் நிகர் வண்மைக் கரதலன் கமலத்
தாரணி மார்பன் ருபணி புகழும்
அரசியற் கமைந்த வமைச்ச நிபுணன்
வேத சிரமாய் மிளிர் சருங்கேரி
சுவாமிக ளடிமுடி சூடுங் துல்லியன்
அத்து விதப்பொரு ளாய்ந்த புண்ணியன்
ஆராய் பலகலை யறிவிற் சேடனே
"டளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும்" ஆமலை
ஒத்த தன்மையு மன்றி யுயர்குணச்
சேடனெ டத்திரிச் செழுமுனி தன்மையும்
தன்னிடத் தமைதலால் தக்ககா ரணப்பெயர்
கொண்ட தீர வுதார குணாகரன்
இத்தரை நீத்துச் சுற்றம் புதல்வர்
மற்றை யருமிவண் மறவாத் துயரம்
உற்றுறப் பிறவா வுத்தம நெறியாம்
சிவோக வாழ்வு செலிந்தனன் மாதோ.

சமாசாரக் குறிப்புகள்.

ஓர் தமிழ்ப் புலவரின் சப்பாஷணை.—தமிழ் மொழியின் சொற்களைத் தம் செம்மை, பசுமை, வெண்மை, கருமை யெனும் நான்கு நிறவேறுபாடுடையனவாமென்றும், இந்நிறங்களையுடைத்தாகிய சொற்களை யுணர்த்துதற்கன்றோ செந்தமிழ், பசுந்தமிழ், வெண்டமிழ், கருந்தமிழ் என்ற பேர்கள் தமிழிற்குக் காரணக்குறியா யெழுந்தனவென்றும், சண்பகப்பூ, மகிழம்பூ, முல்லைப்பூ, தாழம்பூ என்றின் நான்கு பூக்களின் வாசனைகளும் தமிழ் மொழிகளின்கண் காணப்படுகின்றனவென்றும், இப்பண்புகளை வரி ஒலி வடிவினவாகிய தமிழிற் சொற்களைக் காண்டலானும் மோத்தலானும் உணர்க்கலாமென்றும், சாதாரண வழக்கிலுள்ள நன்னூல் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களிற் பயின்ற தற்காலிகத் தமிழ்ப் புலவர்கள் இவ்வுண்மையை ஒரு சிறிதும் உணராரென்றும் ஓர் தமிழ்ப் புலவர் என்னேரித் கூறியதுடனன்றி இவ்வபிப்பிராயத்தை மே

ர்கொண்டு தமது பிரசங்கமொன்றினும் வெளியிட்டனர்.

இஃதின்னணமாக! அவர் கோரிக்கையை, அஃதன்னணமாயின் அவ்வரிய பெரிய விஷயத்தைச் சற்றே தயவுசெய்து வெளியிடுக என யான் வேண்டிக்கோடலும், அவர் இதனை எச்சபைப் புலவரிடத்தாயினும் தீர்விடை பெறுதல் அரிதே; அவ்வாறரிதாதலே உணர்த்தின் அமக்கு இம்மறை மொழியை உபதேசிப்பாம் என்கின்றனர்.

அறிஞர்காள், செம்மை முதலிய பண்புச்சொற்கள் இவர் கூறுமாறு போல கண்டு சிறப்பன்மை யுணர்த்தினுமேனும் இன்றேனும் அசன்னியாயங்களை எவர்க்கும் புலப்படும் வண்ணம் வெளியிடுதல் அறிவோர் கடமை. ஆகலின் யாழ்ப்பாணம் மகா வித்வான் ஸ்ரீ குமாரசுவாமிப் புலவரவர்கள் முதலியோர் இப்பத்திரிகை வாயிலாய் இவரதின் உண்மையை விளக்கி இச்சந்தேகத்தை நீர்த்துப்பார்களென நம்புகிறேன்.—ஓர் சந்தேகி.

கிறிஸ்து மதத்தைத் தழுவிய இந்துக்களை மீண்டும் இந்துமதப்பிரவேசஞ்செய்வித்தல் மேன்மேல் அதிகரித்தும் தக்கால நடப்பாயுமிருப்பது நியாயமாய் ஆலோசிக்கும் ஹிந்துக்கள் யாவருக்கும் திருப்தி விளைக்கத்தக்கதே. பஞ்சாப்பில் இதுகாறும் சம்பவிக்கிறதென்று ஒருவாறு சொல்லலாம். சமீபகாலத்தில் கல்கட்டாவில் ஒருவர் தாம் நீத்த ஹிந்துசமயத்தில் திரும்பப்பிரவேசித்தனர். இப்பொழுது பம்பாயிலிருந்து இத்தகைய சமாசாரங்கள் நம் செவிக்கெட்டுகின்றன. "அட்வோக்கேட் அப் இந்தியா" என்னும் பத்திரிகை அடியில்வருமாறு விளம்பரஞ்செய்கின்றது:—"பம்பாய் வேததர்ம பிரசாரிணி சபையாரின் ஆதரவின்கீழ் செப்டம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கிர்கம் சேர்த்த கண்டாவாடியில் காலஞ்சென்ற கனம். ஆத்மாராம் பாண்டுரங் அவர்களது பங்களாவின் ஹாலில் வைத்து பஞ்சகாலத்திற்கு முன் கிறிஸ்தவர்களான இருவர்களை ஹிந்து சமயத்தவராக்கிப் பரிசுத்தஞ் செய்யப்படும். அத்தருணத்தில் பூரணாநந்தபண்டிதரவர்கள் சம்மதம் நீத்தோரை சம்மதப்பிரவேசஞ் செய்வித்தல் என்னும் விஷயத்தைக் குறித்து ஓர் பிரசங்கஞ் செய்வர்."—ஹிந்து.

கிறிஸ்தவர்களான ஹிந்துக்களைத் திரும்பவும் இந்திய சமூகத்தில் சேர்ப்பிக்கும் விஷயமாய் "ஆரியசமாஜ"த்தாரது முயற்சியின் பயனைக்கண்டு பாதிரிகள் மிகுதியும் கவல்வதாகச் சந்தர்ப்பம் பிரஸ்தாப முண்டாகிறதென்று "பயோனியர்" (Pioneer) பத்திரிகை கூறுகின்றது. இந்த சமாஜத்தார் இக்கொள்கையைக் கொண்டொழுகத்தொடங்கி ஏறக்குறைய மூன்று வருஷமேயாகிறது. இதற்குள் புதிதாய்க் கிறிஸ்தவர்களாகிப் பின் தாமப்பிரவேசித்த மார்க்கத்தின் தவறுதலைக் கண்டு பரிசுத்தக்கிரியை செய்வித்ததின்மேல் தம் பூர்வ மதத்திற் சேர்ந்தோரது தொகை 2,000 வரையாகிறது. உண்மையாயுள்ள தொகை இதற்கு அரைப்பங்கு அல்லது காற்பங்கு ஆயிருந்தாலும் பாதிரிமார் வேலையின் பயன் இவ்வளவு சீக்கிரம் உருகிப்போவதைக்கண்டு அவர் பயப்படுவது இயல்பே.—மதராஸ் மெயில்.

அந்நியமதப் பிரவேசஞ் செய்யும் நம்மவர் தொகை அதிகரித்துக்கொண்டு வருமிக்காலத்தில் இவ்விதமான சன்முயற்சி யில்லாவிடின் நாளாவட்டத்தில் நம்மதத்தின் கதியென்னும்? மருணீக்கியார் சமணராகிப் பின் நம் மதத்திற்கு மீண்டு அப்பர் சுவாமிகளென்னும் சைவாசாரியராய் விளங்கினாரன்றோ. ஆகலின் நன்மைகடைப்பிடிப்போமாக.— ப-ர்.

Printed at the Victoria Press ("திருவாங்கூர் அபிமானி" ஆபீஸ்) Nagercoil.